Registered No. M. 1159.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

இது
சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்
எனப் பெயரிய
**சைவ மஹா சபையின்**
மாதாந்தப் பத்திரிகை.

மலர் 5. | காலயுத்தி௵ தைமீ -1919௵ ஜனவரிமீ | இதழ் 1

| உள்ளுறை. | பக்கம். |
|---|---|
| விநாயகர் துதி ... ... | 1 |
| அர்ச்சாதீபம் ... ... | 4 |
| சூளை, சோமசுந்தர நாயகரவர்கள் சரித்திரச் சுருக்கம் ... | 8 |
| சிவஞானபோதம் ... ... | 13 |
| சைவாசாரபோதம் ... ... | 16 |
| திருவிளையாடற் புராணம் ... ... | 18 |
| ஒரு மெய்யன்பரும் திருப்பணியும் ... ... | 23 |

இஃது
திருப்பாதிரிப்புலியூர் ஞானியார்மடாலயம்
ஸ்ரீலஸ்ரீ - சிவசண்முக மெய்ஞ்ஞான சிவாசாரிய சுவாமிகளுக்கு
சமர்ப்பிக்கப்பெறுவது.

பத்திராசிரியர்
இருக்கம் - ஆதிமூல முதலியார்.
(Retired Accountant, Military Accts., Department.)
நெ. 43, பாளையப்பன்வீதி, ஏழுகிணறு, சென்னை.

வைதிக சைவ அச்சுக்கூடம்.
நெ. 292, தங்கசாலை வீதி, சென்னை.
1919
தபாற்செலவு உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்று.

## சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தின்

### போஷகர்கள்.

ஸ்ரீமான் யஸ். இரத்தினவேல் செட்டியாரவர்கள்
Dubash, Messrs. Best & Co.

,, வி. மாசிலாமணிப் பிள்ளையவர்கள், பி. ஏ., பி. எல்.
Official Referee, High Court.

,, ராவ்சாஹிப் - பி. மாசிலாமணி முதலியாரவர்கள்
Engineering Contractor.

,, ராவ்பஹதூர் கே. வைத்தியலிங்கம் பிள்ளையவர்கள்
Presidency Post Master.

,, வி. முத்தையா பிள்ளையவர்கள்
Merchant, Periyanna Moodaly Street, Madras.

,, ஆர். காசிவிசுவநாத முதலியாரவர்கள்
Snuff & Tobacco Merchant, Madras.

,, திரு. சபாபதி முதலியாரவர்கள்
Retired Sub-Engineer, Mint Street.

,, C. தருமலிங்கமுதலியாரவர்கள்
Contractor, Mint Street, Madras.

---

## விளம்பரம்.

அடுத்த பிப்ரவரிமாதப் பத்திரிகை தாமதித்து வரக்கூடும்.

ப-ர்.

### தம்பூர் வேண்டும்.

30 ரூபா முதல் 40 ரூபா வரையில் மதிப்புள்ள புதிய நல்ல சுரமுள்ள தம்பூர்வேண்டும். விற்பனைசெய்வோர் எமக்குத் தெரிவிக்கவேண்டுகிறோம்.

பத்திராதிபர்.

### காலி கோயில்மணியம்,

சென்னைக்கு நான்குமயில் தூரத்திலுள்ள பாடியெனவழங்கும் தேவாரம்பெற்ற திருவலிதாய க்ஷேத்திரத்தில் பூசாகாலங்களில் தேவாரம் ஓதவும். கோவில் மணியம் நடத்தவும் ஒரு சைவர் வேண்டும். இவருக்குச்சுமார் இரண்டு ஏகர் மானியநிலமும் மாதம் ஒன்றுக்கு 5 ரூபா வீதம் சம்பளமும் வாடகையின்றி குடியிருக்க வீடும் கொடுக்கப்படும். இப்பணியை விரும்புவோர் எமக்கேனும், சென்னப்பட்டணம் மிண்டுபோஸ்டு வெங்கைபர் வீதி 7-8. நெ. வீட்டிலிருக்கும் ஷை ஆலய தர்மகர்த்தர் ஸ்ரீ பாடி தணிகாசல முதலியார் அவர்களுக்கேனும் தெரிவித்துக்கொள்க.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.

மலர் 5. | காலயுத்தி௵ தை௴ — 1919௵ ஜனவரி௴ | இதழ் 1.

## விநாயகர்துதி. *

இருநான்கு மதம்பொழியு மிருள்வேழ மிரிந்தோடத்
திருஞான மதமூன்றுஞ் சிவவேழ மகிழ்களிறு
பெருநாத முடிநடிக்கும் பெரியோன்ற னுடனாடி
கருஞான மலைதொலைக்குங் கற்பகப்பொற் பதம்பணிவாம்.

(இ-ள்.) மதம் பொழியும் இருள் வேழம் இருநான்கும் = மதத்தைப் பொழிகின்ற இருள்போன்ற யானைகள் எட்டும், இரிந்து ஓட = அஞ்சியோடுமாறு, திரு ஞானம் மூன்று மதம் ஆம் = உயர்வாய ஞானமென்னும் மும்மதங்களையும் பொழிகின்ற, சிவ வேழம் மகிழ் களிறு = சிவமென்னும் யானையானது மகிழ்கின்ற யானையும், பெரு நாதம் முடி நடிக்கும் பெரியோன் உடன் ஆடி = பெரிய நாத முடியினின்று திருக்கூத்தாடுகின்ற மேலவராகிய சிவபெருமானுடனே சேர்ந்து விளையாடுகின்றவனும் ஆகிய, கரு ஞானம் மலை தொலைக்கும் = பிறத்தற் கேதுவாய அஞ்ஞானங்களின் மலையை யொழித்தருளும், கற்பகம் பொன் பதம் பணிவாம் = கற்பக விநாயகரது பொன்போலும் அரிய திருவடிகளை (யாம்) வணங்குவாம்.

காப்புரிமை பற்றி முன்னரும், தந்தை, தாய், மைந்தர் என்னு முறை பற்றிப் பின்னரும் வணக்கங் கூறப்பட்டது. இருள் வேழம்-உவமைத் தொகையாயின் மிகுதிபற்றிய நிறவுவமம். வினைத்தொகையாயின் இருண்ட வேழம் எனக்கொள்க. இருள் என்பது யானையை விசேடித்து நிற்கவும், மதத்திற்கு அடையாக்கி, "கறுத்த மதநீர்" என்றுரைத்தாருமுளர். யர்னை மதமாவது இரத்தம் அதி

* இத்துதி புட்டினத்தடிகள் புராணத்திலுள்ளது. இவ்வுரை வித்வான் நா. கதிரைவேற்பிள்ளை யவர்கள் இயற்றியது.

கரித்து, அதிகரித்தவது கன்னத்தானும், கரத்தானும், பீசத்தானும் வெளிப்பட்டுப் பாய்தலாம். அவ்விரத்தஞ் செங்நிற முடைத்தன்றிக் கரியதாகாது. ஆகலின் அங்ஙன முரைத்தல் தவறும். வேழம் இருநான்கு என்றது அட்டதிக்கு யானைகளை. அவையாவன;—ஐராவதம், பூண்டரீகம், வாமனம், குமுதம், அஞ்சனம், புட்பதந்தம், சாருவபூமம், சுப்பிரதீபம் என்பனவாம். யானைகளோடவும், சிவவேழம் மகிழவும் மும்மதங்களையும் பொழிகின்ற களிறு என்க. விநாயகராகிய யானை திக்கியானைகளை யஞ்சுமாறு செய்வதனை, “ஆனையோரெட்டு மாசையெட்டடைய வடர்ந்தெதிரானைகொம் பொசித்து” எனவருங் காவேரிப் புராணச் செய்யுளுமுணர்த்திற்று. தன் - சாரியை.

ஆக்கும் என்பது ஆம் என நின்றது. ஆக்குதல் உண்டாக்குதல். ஈண்டு மதத்தைப் பொழிதல். “இருநான்கு மதம்பொழியும் இருள்வேழம் இரிந்து ஒட, என்பதற்கு, எட்டாகிய குணமதங்களை விளைக்கும் பேரிருளாகிய ஆணவமல யானையானது அஞ்சியகல, எனப்பொருள் கூறலுந் தக்கதாம். ஆணவத்தை வேழம் என்றதற் கியைய அதன் குணங்களை மதம் என உருவகித்தார். எட்டுக்குணங்களாவன:—விகற்பம், கற்பம், குரோதம், மோகம், கொலை, அஞர், மதம், நகை யென்பனவாம். அதனை,

> கூறிய மூன்று மலத்தின் குணக்குறி
> வேறு கிளக்கின் விகற்பங் கற்பங்
> குரோத மோகங் கொலையஞர் மதநகை
> விராயெண் குணனுமா ணவமென விளம்பினை.

என இருபாவிருபதிற் கூறியருளியதனு னறிக. ஆணவம் யானையாக உருவகிக்கப் படுவதை, “என்றும் யானெனுமா ணவவேழ மணுகாது துதியுவப்புறு மெய்ச்சிவபோகம் விளைவிக்குங் களிற்றை’ எனப் பஞ்சாதிகார விளக்கத்தினும், “மனவ னத்தின் மதமெனும் யானையைச் - சினவி நிற்கும் - நாகிள வேழமே” எனச் சித்தாந்த சிகாமணியினுங் கூறியவாற்று னறிக. இருநான்கு - இரண்டானுறழ் நான்கு. “மதமூன்றும்” எனவும் பாடம். ஊன்றும்—ஊற்றும்; மெலித்தல்.

“மதமூன்றுஞ் சிவவேத மகிழ்களிறு” எனப் பாடங்கொண்டு, விநாயகருக்கு முகத்தின்மேல் யானையுருவின்மையின், மும்மதத்த னாதல் கூடாதென்றும், மூன்றும் வேதமாகிய சாமவேதத்தால் மகி

மூப்படுங் களிறு என்று முரைப்பது இழுக்காம். என்னை? முகத்தின்மேல் யானையுரு வின்றேல் களிற்று முகன் எனக் கூறலன்றி களிறு எனக்கூறல் அடாதாம். விநாயகருக்கு யானையுருமுற்று முள்ளது எனக் காப்புக்கண் இரண்டாஞ் செய்யுளிற் கரதலாமலகம் போல் விளக்கி யுள்ளாம். மூன்றுவது வேதஞ் சிவவேதமும் மகிழுதலு முடைத்தேல், ஏனையவேதங்கள் அவவேதங்களும், துக்கித்தலு முடையனவாமோ? அன்றேயாகலின் மூரணென்க. விநாயகராகிய யானைக்கு மும்மதமு முண்டென்பதை, "ஒரு கோட்டனிரு செவியன் மும்மதத்தன்" எனச் சிவஞான சித்தியாரினும், "ஒழுகிய மும்மதத் தொளிகொண் ஞானமா-ரழகிய பிள்ளையார்" எனச் சிவபுண்ணியத் தெளிவினும் "ஆக்குமும் மதத்தோ னெந்தை" எனப் பரமரகசியத்தினும், "மும்மதத்தனென் றொருபெயர் தனக்கு மொய் கூந்தல்" எனத் தணிகைப் புராணத்தும், "மதமூன்று மாருக வருங்களிற்று" என அருணசல புராணத்தும், "ஊற்றெடுத்துவண் டோலிடு மும்மதத்-தாற்றொழுக்கினருவியஞ் சாரல்வாய்" எனத் திருச்செந்தூர்ப் புராணத்தும் "முற்ப வக்கடல் சாடிய மும்மதக் - கற்பகத்தைக் கருத்துளிருத்துவாம்" எனச் சரபபுராணத்தும், "ஒற்றைமருப் பிருசெவிமும் மதநால்வாய் மழகளிற்றை" எனத் திருவேரகபுராணத்தும், "இலகுமும் மதமலை யடிகளேத்துவாம்" எனத் திரிசூலகிரி புராணத்தும், ஒருகொம்பு, இருமதம், மூன்றுவிழி, இருபதம், ஐந்துகையென்னும் உறுப்புகள், யானை யுருவத்தை யடைந்தமையால் முறையே இருதந்தம், மும்மதம், இருகண், நாற்பதம், ஒருகரம் என ஆயினவென்று, "ஏர்கொண்ட தன்னுறுப்பொன் றிரண்டிரண்டு மூன்றுமூன் றிரண்டிரண்டு-பார்கொண்ட நான்கைந்தொன் றாகவரு குஞ்சரத்தைப் பரவி வாழ்வாம்" எனத் திருக்குறுக்கைப் புராணத்தும், "மணிகொண்ட கிம்புரிக்கோ டைங்கரநால் வாய் மும்மை மதம்வாய்ந் தோங்கும்" எனத் திருமாணிக்குழிப் புராணத்தினும் பிறவற்றினுங் கூறியவாற்றா னறிந்தமைக.

களிறு—(மதக்) களிப்பினை யுடையது. தந்தைக்கு மூத்த பிள்ளையினிடத்து ஆர்வம் மிகும் என்னும் உலகவழக்கானே "சிவவேழ மகிழ்களிறு" என்றதாம். சிவவேழம் என்பதை, "புயல் காட்டும் பனிவரையின் பிடிதழுவுஞ் சிவவேழம்" எனத் திருக்குற்றாலப் புராணத்தும், "மதகரி யுரித்தோன் மதகரியாகிக் - கூடிய கலவியிற் குவலயம் விளங்க" எனப் பிள்ளையார்கதையினுங் கூறிய

வாற்றுணறிக. ஆறாதாரங்களையுந் தரிசித்த சிவயோகிகள் ஆயிர மிதழ்களையுடைய கமலத் தடியினுள்ள அமிழ்தத்தை எழுபத்திரா யிர நாடிநரம்புகளி னிறைக்க, தசநாடிகளினின்றுந் தசநாதங்க ளெழாநிற்க, அங்ஙன் பரசிவன் றோன்றி நடிக்குமாகலின் "பெரு நாத முடிநடிக்கும் பெரியோன்" என்றதாம்: அவருடன் விளை யாடுந் தொழிலை யுடையர் என்றபடி. ஆடி என்பது, "மிகநல்ல வீணை தடவி" என்றாற்போல நின்ற உயர்திணைப்பெயர். "உயர்திணை தொடர்ந்த" என்னுஞ் சூத்திர முடிபேற்றது. கரு ஞானமாவன - பசு ஞான பாசஞானங்கள். திரு ஞான மதமூன்றும் என்பதற்கு திருவும் ஞானமுமாகிய மும்மதங்கள் என வுரைத்தலு மொன்று. ஞானங்களாவன:—அபரஞானம், பரஞானம்.

---

## அர்ச்சாதீபம்.

( 4-வது மலர் 288-வது பக்கத் தொடர்ச்சி. )

௫-வது வசனத்தில் (எவ்வித சரீரமும் அற்றவர்) என்று பொருளுண்டாவதாகக் கூறுகின்றனர். அதில் (அகாயம்) என்பதே யன்றி வேறு பிரயோகமில்லை. அது சரீரமின்மையை மாத்திரம் விளக்கும். எவ்வித சரீரமுமில்லையென்று விளக்காது. அதனால், நம்மவர் தேடும் பொருள் மிகையாயிற்று. அதவா (எவ்வித சரீர முமற்றவர்) என்று ஒருவசன மிருப்பினும் அதுவும் எம்மைப் பாதிக்கமாட்டாது. யாமே அந்தப்பரம்பொருளுக்கு அதீதத்தை ஒப்பியிருக்கின்றோ மாகையால், நம்மவர் பரனுக்கு அருவத்தை யொப்பினமையால், அவரை அருவப்பொருள்களி லொன்றுக்குந் தோஷம் அவர் பக்கலேவந்து சாரும்.

௬-வது வசனத்துக்கு (படைப்பை = விக்கிரகங்களை) தொழு வோர்கள் மிகவுங் கொடிய அந்தகாரத்தை அடைவார்கள் என்று பொருள்கூறி ஸந்தோஷிக்கின்றார்கள். படைப்பு என்றதற்கு அர்ச் சாபிம்பம் என்று எந்த நிகண்டில், அல்லது எந்த வியாக்கியானத் திற் பெறப்பட்டிருக்கின்றது? அதில், (சம்பூதிமுபாஸதே) எனவும், (சம்பூத்யாக்ம்ரதா꞉) எனவும் போந்தவை முறையே பிரகிருதியும், விகிருதியும் ஆம். நம்ம பூர்வபட்சிகள் இயற்கையைத் தொழுவோர் என்றது பிரகிருதியையும், படைப்பைத் தொழுவோர் என்றது விகிருதியையும் விளக்கின. பிரகிருதி விகுருதிகளை உபாசித்தல் கூடாதென்பது எமக்கும் ஒப்பே. அர்த்தத்துக்குமேல் அநர்த்த

மாக (படைப்பை = விக்கிரகங்களை) என்று கொஞ்சியுரைத்ததை யே சண்டு நெஞ்சிலொழித்தது. பிரகிருதி விகிருதிகளைக் காரண வஸ்து வல்லவென்று வேதம் அறுதியிட்டுரைத்து, அதீதமான தொன்றையே காரணவஸ்துவெனவும், அதனையே தியானிக்கவே ண்டியதெனவும், அது (த்யேய) வஸ்துவாக அறிந்தநுபவிக்கத் தக்கதெனவும் பரிஷ்கரித்திருக்கின்றது. "ப்ரஹ்ம விஷ்ணு ருத் ரேந்த்ராஸ் ஸம்ப்ரசூயந்தே நகாரணம், காரணம் து த்யேயஸ் ஸர்வே ஸ்வர்ய சம்பந்ந ஸர்வேஸ்வரஸ்ஸம்பு:" எனப்போந்த அதர்வசிகை மந்திரமே அதுவாம். இந்த ஸ்ருதியில் பிரஹ்ம விஷ்ணு ருத்ரேந்தி ரர்கள் படைக்கப்பட்டமையும், அதனால் அவர்கள் காரணராகா மையும் விளக்கி, அநந்தரம் காரண வஸ்துவை (ஸம்பு) வாசகத் தால் நிருபணஞ்செய்து, அவரையே தியானமார்க்கத்தால் உபா சிக்கத்தக்க த்யேயவஸ்துவாகவும் பிரகாசம்பண்ணியிருத்தலால், பூர்வபட்சிகள் உதகரித்த வசனம் எமக்குப் பாதகமான்றில்லை. அந்த வசனத்தின் கருத்தை யநுசரித்த கெஷ வாஜஸநீயம், "அந்த தம: ப்ரவிஸந்தியே வித்யாமுபாசதே, ததோபூய இவதே தமோய உவித்யாயாக்ரதா:" என்னும் (கூ) வது மந்திரத்தாலும் எமது உண்மை விளங்கும். இதில் அவித்யோபாசனை, வித்யோபாசனை என்னும் இரண்டுவிதங் கேட்கப்படுகின்றது. இயற்கையைத் தொ ழுவோர் என்பவரே அவித்யோபாசகர். படைப்பைத்தொழுவோர் என்பவரே வித்யோபாசகர். இவ்விருதிறத்தவரும் பாசஞானியர், பசுஞானியர் என முறையே வெளியாகாநிற்பர். இவரையே கேவ லம் பிரகிருதியை உபாசிக்கின்றவர்களும், காரிய பிரஹ்மோபாசனை செய்கின்றவர்களும், என அறிந்தோர் கூறுகின்றனர். காரிய பிரஹ் மங்களென்றது சேதனர் தம்முட் சிவசத்திபதிந்த விசிட்ட புருட ரை. இவர் தம்மையே பதிகளென மயங்கிப் பசுபதியாகிய சிவனை நாடாத படிறர் தம்மையே ஆண்டு நிஷேதித்தபடியாம். இவ்வுண் மைகளைத் தெளியாமல் பூர்வபட்சிகள் வீண்விபரீதம் பேசுவதை யாவரோ ஒப்புவார்கள்?

நம்மனோர் சித்தசமாதானத்துடன் பின்வரும் (மந்திரத்தை) கூர்ந்து யோசிக்கக்கடவர். "பூஷந்நேகர்ஷே யமசூர்ய ப்ராஜாபத்ய வ்யூஹரஸ்மீன் சமூஹதேஜ:, யத்தேரூபம் கல்யாண தமம் தத்தே பஸ்யாமியோசாவசௌ புருஷஸ்ஸோஹமஸ்மி" என்னும் இது அவர் பிரமாணமாகக்கொண்ட வாஜசநேயத்தில் (கசு) வது திருமந் திரமாகையால், அதை யாம் சூசிப்பித்தல் அவசியமாயிற்று. இதில்

பரனது அஷ்ட தநுவி லொன்றாகிய சூரியோபாசனை சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தச் சூரியன் விகிருதிகளாகிய படைப்பிற் சேர்ந்தவனேயன்றி வேறில்லை. படைப்பைத் தொழக்கூடாது என்று உபந்யசிக்கு நம்மவர் இதற்கு என்ன சமாதானந் தேடிக்கொண்டனர்? "யயேஷோம்தராதித்யே ஹிரண்மய:" என்னுஞ் சுருதியில் ஆதித்யாந்தராத்மா ஹிரண்மயபுருஷனென்று சொல்லி, "ஏஷபூதாநாமதிபதி:" என்று அந்தப்புருஷனை இன்னாரெனவும் பிரகாசம் பண்ணியிருக்கின்றது. பூதேசர் என்று அமரகோசத்தால் ரூடியாகப் பிரசித்தியடைந்திருக்கும் ஹிரண்மயஸ்வரூபர் (ஹிரண்மயோஹம் சிவரூபமஸ்மி) என்னுஞ் சுருதியால் வெளியாகின்றனர். அன்றியும், "நமோ ஹிரண்யபாஹவே ஹிரண்யவர்ணாய ஹிரண்யரூபாய ஹிரண்யபதயேம்பிகாபதயே உமாபதயே பசுபதயே நமோநம:" என்னுஞ் சுருதியாலும் அது சிறக்கும். "சூர்யோ முக்யசரீரந்து சிவஸ்ய பரமாத்மந:" என்னும் உபப்பிரஹ்மணமுஞ் சான்றாம். இந்த விசாரத்தால் விகுருதியாகிய சூரியோபாசனை கூடாது என்பதற்கும் யாம் தேடிய சமாதானங்கள் வெளியாயின. இந்த உபாசனையைப் பிரதிபாதிக்கும் வாஜசநேயத்திற்றானே அந்தர்யாமியாகிய சிவனைக் குறித்து "யத்தேரூபம் கல்யாணதமம் தத்தே பஸ்யாமி" என்று கூறி, சிறந்த மங்கலமாகிய நின்வடிவம் யாதோ, அதனை நான் பார்க்கிறேன் எனத் துதித்திருக்கின்றமையுங் கண்டுணர்க. இப்படிப் பலபடியாலும் பரனது உண்மையும், அவனையறிந்து உபாசிக்கவேண்டிய விதமும் வெளியாயினமையால், இவை தெரியாமல் பூர்வபட்சிகள் செய்யும் வெறுங்கோஷம் கண்டகோஷகரமே ஆயிற்று. இன்னும் விரிக்கிற்பெருகும்.

இப்படி ஒவ்வொரு வாக்கியமும் எமது உண்மையையே விளக்கி நம்மவர்களுக்கு ஒரு நலத்தையுஞ் செய்யாமல் கைவிட்டமையால், அவர்கள் குணப்பட்டுய்யுமாறு ஏனைவிஷயங்களையும் பிரகாசப்படுத்துவாம். வேதத்தில் பிரஹ்மத்துக்கு உருவஞ் சொல்லவில்லையென்று மயங்கிய அன்னோர் பின்வசனங்களை யோசிக்கட்டும்.

"உமாசஹாயம் பரமேஸ்வரம் ப்ரபும், த்ரிலோசனம் நீலகண்டம் ப்ரசாந்தம், த்யாத்வா முனிர்க்கச்சதி பூதயோனிம், ஸமஸ்தஸாக்ஷிம் தமஸ: பரஸ்தாத்." என்னுங் கைவல்யோபநிஷத் வாக்கியத்தில், உமாஸஹாயம்-திரிலோசனம் நீலகண்டம் என்னும் உருவங்கள் பரனுக்குக் கேட்கப்படுகின்றன.

"ருதக்ம், ஸத்யம் பரம் ப்ரம்ஹா புருஷாக்ருஷ்ண பிங்களம்" என்னுந் தைத்திரியவசனத்தில், கிருஷ்ணபிங்களம்-ஊர்த்வரேதம்-விருபாக்ஷம்-விஸ்வரூபம் இத்யாதிகள் பிரஹ்மத்தினது ஸ்வரூப லக்ஷணமாகக் கேட்கப்படுகின்றன. இதில் கிருஷ்ணம் என்பது கழுத்தையும், பிங்களம் என்பது ஜடையையும் வர்ணபேதங்களால் விளக்கின. இது நீலலோஹிதர் என்னுந் திருநாமத்துக்கு அர்த்த வைபவமாயிற்று. மேல், ஜீவர்களைப்போல அதோமுகமான ரேதஸை உடையவரல்லவென்பதை விளக்க (ஊர்த்வரேதம்) என்பதும், ஜீவஸாமாந்யமான நேத்ரங்களுடையவரல்ல வென்பதை விளக்க, உபநயனவிசேடத்தைக் காட்டும் (விருபாக்ஷம்) என்பதும் வெளியாயின. இவ்வளவேயன்றி (விஸ்வரூபர்) எனவும் பெறப்பட்டது. இது விஸ்வத்தைத் திருமேனியாக வுடையவரென்பது. அஷ்டமூர்த்தியென்பதே அதுவாம். வேதத்தில் "ப்ரிதிவ்யோபவ, ஆபஸ்சர்வ, அக்னேருத்ரோ, வாயுர்பீம ஆகாசஸ்ய மஹாதேவ, ஆத்மாந: பசுபதி, சூரியஸ்யோக்ர: சந்த்ரஸ்யசோம:" என்னும் வசனத்தால் சிவபெருமான் பிருதிவி என்னுந் தநுவுக்குப் பவன் என்னு நாமத்தால் அதிஷ்டானமும், சைதன்யமுமாக இருக்கின்றாரெனவும், ஆப: என்னுந் தநுவுக்கு ஸர்வான் என்னு நாமத்தால் அதிஷ்டானமும் சைதன்யமுமாக இருக்கின்றாரெனவும், அக்கினி என்னுந் தநுவுக்கு ருத்ரன் என்னு நாமத்தால் அதிஷ்டானமும் சைதனியமுமாக இருக்கின்றாரெனவும், வாயுவென்னுந் தநுவுக்குப் பீமன் என்னு நாமத்தால் அதிஷ்டானமும் சைதனியமுமாக இருக்கின்றாரெனவும். ஆகாசம் என்னுந் தநுவுக்கு மஹாதேவன் என்னு நாமத்தால் அதிஷ்டானமும் சைதன்யமுமாக இருக்கின்றாரெனவும், ஆத்மா என்னுந் தநுவுக்குப் பசுபதி என்னு நாமத்தால் அதிஷ்டானமும் சைதன்யமுமாக இருக்கின்றாரெனவும், சூரியன் என்னுந் தநுவுக்கு உக்கிரன் என்னு நாமத்தால் அதிஷ்டானமும், சைதனியமுமாக இருக்கின்றாரெனவும், சந்திரன் என்னுந் தநுவுக்கு ஸோமன் என்னு நாமத்தால் அதிஷ்டானமும், சைதனியமுமாக இருக்கின்றாரெனவும் பெறப்படுகின்றது. இதில், சூரியதநுவே பிரகிருதவிசாரமாயுள்ளது. இந்தத்தநுவுக்கு அந்தராத்மாவாயிருந்து ஜகச்சக்ஷுஸாவாயும், அநேக சக்ஷுஸுக்களைப் பிரகாசப்படுத்துவதாயும் விளங்குந் தன்மையாலன்றோ (விஸ்வதஸ்சக்ஷுருதம்) எனவுங் கேட்கப்படுகின்றது? அந்தச் சக்ஷுஸுக்களில் ஆத்மஜ்யோதியாயிருக்குந் தன்

மையை "ஆத்மஜ்யோதிர் மனோஜ்யோதி ஜ்யோதிஸ்சட் சுஷர்பஸ்யதி நபாஹ்யர், ப்யாத்பரம்ஜ்யோதி, ஸ்யஜோதிஸ் சிவமுச்யதே." என்னுஞ் சுருதியாலறிந்திடுக. இவ்வுண்மைகளையே (நிலநீர் நெருப்புயிர் நின்விசும்பு நிலாப்பகலோன்—புலனாயமைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்) என்னுந் திராவிடஸ்ருதியும் பிரகாசமபண்ணிற்று. இந்த விசாரத்தால் பானுக்கு அஷ்ட தநுக்கள் கேட்கப்பட்டமையும், அத்துடன் ஆதித்யோபாஸனை பெறப்பட்டமையும் வெளியாயினமையால், அவருக்கு ஒரு தநுவு மில்லையென்றும், அவரது படைப்பை வணங்கக்கூடாதென்றும் பூர்வபட்சிகள் பேசுவது அவைதிகமென்னத் தட்டில்லை. இன்னும் விரிக்கிற் பெருகும். (இன்னும்வரும்,)

உத்தமோத்தம சைவாபிமானியாய் விளங்கிய

## சோமசுந்தர நாயகரவர்கள்

### சரித்திரச் சுருக்கம்.

"ஒரும் வேதாந்தமென் றுச்சியிற் பழுத்த
வாராவின்ப வருங்கனி பிழிந்து
சாரங் கொண்டசைவசித் தாந்தம்."

என்னுமெய்கண்ட சமயம், புறமதத்தர் கூறும் பித்துரை பேதுரைகளால் அலக்கழியா வண்ணஞ் சமயாசாரியர், சந்தான குரவர் முதலியோர் தோன்றி வரம்பு கட்டிச்சென்றனர். கால கதியால் வரம்பழியவே அதை மீட்டுக்கொடுக்க வந்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர நாயகரவர்கள் தங்கடமையை நன்குமுடித்துத் தற்சிவத்துற்றனர் எனக்கேட்டு மனந்திகைக்கின்றது. அந்தோ! அவர் மறைந்ததால் சைவ சமயிகளுக்கோர் ஊன்றுகோல் கைநழுவி விட்டதுபோலும். சென்ற 35 வருடங்களாகச் சைவசம்பந்தமான அனேககாரியங்கள் அவர்செய்திருப்பதாலும், அவைகளின் பலனைப் பலரும் அனுபவித்துக்கொண்டு வருவதாலும், அவர் நம்மைவிட்டு பிரிந்தாரென்பது தோன்றவேயில்லை. அவர் காலமாய்விட்டதால் உண்டான மனநோயைப் பல பத்திரிகைகளும் பண்டிதர்களும் முறையிட்டிருப்பதால் அம்மகா புருஷரத்தினத்தினிடத் தன்பும் நன்றியும் பாராட்டாத சாம்பவன் எவனுளன்? அவர் வேதாகம உணர்ச்சியையும விஜய வைபவத்தையுங் கேட்க விரும்பாத ஆரிய னெவனு

புண்ணியமும் சித்தித்தன. சைவசித்தாந்தக் கருத்துகளை தமிழில் கத்தியரூபத்தில் இவர்தான் முதன் முதல் வெளியிட்டவர். இவர் தமக்கெனவோர் மணிப்பிரவாள நடையைக் கற்பித்துக்கொண்டு வாசிப்பவர்க்கின்ப மூட்டும் பெரும்பாக்கியத்தைப் பெற்றிருந்தார்.

## பிரசங்கங்கள்.

இவர் கிரந்த கர்த்தாவா யிருந்ததுமன்றித், தமிழ் நாடெங்கு முலவித் தம் பிரசங்க கர்ச்சனையால் சைவத்திற்குப் பழிகூறியவர்கள் ஓடிப்பதுங்கும்படி செய்திருந்தார். தென்தேசத்தின் ஒவ்வொரு பிரதான நகரத்தாரு மிவர் பிரசங்க மழையைச் செவியான் மாந்தியதுண்டு. சைவசித்தாந்தத்தின் மகிமை இவர் பிரசங்கத்தால்தான் அதிகமாய் வெளியாயிற்று. "சமயங்களெல்லாஞ் சித்தாந்தத்திற்கு அங்கமாகும்; சித்தாந்தத்திற் கெம்மதமுஞ் சம்மதம். இதற்குமேற்பட்டுச் சமயப்பொறுமை யுடையது மற்றெம்மதமுமில்லை" என்னு முண்மையினைக் காட்டிப் பலரைச் சித்தாந்திகளாக்கிவிட்டனர். திரிசிரபுரத்தில் இவர் அடுத்தடுத்துப் பிரசங்கஞ்செய்ய நேரிட்டதால், அங்குள்ள அந்தணர்பலர் இவர் வாக்கைக் குருமொழியாகக் கொண்டிருந்தனர். இவர் பிரசங்கத்தில் ஆயிரங் கணக்கான ஜனங்கள் கூடி ஒரேசிந்தனையாயுற்றுக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். இவர் அப்பையதீக்ஷித ரவர்களைப்போன்று சதநூல்களியற்றி, ஹரதத்தரைப்போன்று தீரம் வகித்துத் திருஞான சம்பந்தரைப் போன்று திருமேனிகொண்டு, திருநாவுக்கரசைப் போன்று சிவவேடம் பொலிந்து, சுந்தரரைப்போன்று தாமரைத்தண்ணீர்க் கொப்பாயில்லற வாழ்க்கையை நடத்திச் சேக்கிழார் போன்று அடியார் பெருமையைவிளக்கி மணிவாசகரைப் போன்று இன்னிசையாய்க் கனிவாய்ப் பிரசங்கித்தால் யாவர்தான் இவர்கட்டில் அகப்படாதார்! திருநெல்வேலிச் சிவாலயத்தில் தத்துவ மண்டபத்தில் இவர் சில வருடங்களுக்குமுன்செய்த பிரசங்கத்தின் அருமையையும் வலிமையையும் அளவிடற்கரிதென அப்பதியிலுள்ளார் இன்றும் இறும்பூதெய்துகின்றனர். சென்னையில் இவர் பிரசங்கங்களால் விளைந்த பலன்களை நேர்க்குழி, இவர் அருண் மூர்த்தியெனவே யெண்ணலாம். சமயாசாரியர் நால்வர்க்கும் பலஸ்தலங்களில் திருவிழா உண்டானது இவரின் பெருமுயற்சியாற்றான்.

### நன்குமதிப்பும் பட்டப்பேறும்.

இவ்வாறு பல நூல்களானும், சைவப்பெருமணங் கமழுந் துமித கம்பீரவாக்கினாற் செய்த பிரசங்கங்களானும், சித்தாந்தத்தி னுண்மை பிரகாசிக்கச் செய்தமையின், மடாதிபதிகள், ராஜாக் கள், ஜமீன்தார்கள் இவருக்குவேண்டிய உதவி புரிந்துவந்தனர். ராஜா பாஸ்கர சேதுபதியவர்கள் "வைதிக சைவ சித்தாந்த சண்ட மாருதம்" என்னும் பட்டப்பெயர் தந்து மேம்பாடியாற்றினர். திருவாவடுதுறையார் "பரசமய கோளரி" யென ஆசிர்வதித்த னர். சாம்பவர்களெல்லாஞ் "சைவமார்த்தாண்டன்" னெப் புகழ்ந்து கொண்டாடினர்.

### இறுதிக்காலம்.

முப்பது ஆண்டுகளாகச் சைவ நுட்பங்களிலாழ்ந்து உழைத்து வந்த இவரது தேக சௌக்கியம் 1898ளு முதல் குன்றிக்கொண்டே வந்தது. அதையுநோக்காது தங்கடமையை நிறைவேற்றிக் கொண்டே வந்தார். சதுர்வேதம்போன்ற நான்கு கிரந்தங்கள் இவ்விறுதிக்காலத்து வெளியாயின. வெளி நகர்களிலும் பல பிர சங்கங்க ளிடையிடையே நடந்துகொண்டுவந்தன. இவர் கடைசி யாய்ச் செய்த பிரசங்கம் சென்னையிற் காசிவிஸ்வநாதர் ஆலயத்தில். அப்பிரசங்கத்தின் சுவை இன்றுமினித்துக் கொண்டிருக்கிறது. அது நடந்து ஒரு திங்கள் முடியுமுன் விஸ்வேஸ்வரர் அவருக்குத் தாரகமந்திர மோதியது அவருபன்னியாச மகிழ்ச்சியாலெனச் செப்பலாம்.

நாளது 1901ளு பிப்ரவரிமீ 22உ சுக்கிரவார மாலை 4-மணிக் குத் தங்குருக்களைத் தருவித்து, விபூதிப்பிரசாதம் பெற்றுத்தரித் துத் தன்குமாரரைத் தேவார திருவாசகங்களோதச் செய்து கவ னித்துத்தாமே "திருச்சிற்றம்பலம்" எனப்பூர்த்தி செய்து, கைகூப் பிச் சிரசிற்சேர்த்து "இதோ இடபவாகன ரூடராய் அர்த்த நாரீஸ் வரர் வந்திருக்கிறார், தரிசியுங்கள்" என்னுந் திருவார்த்தையுடன் மௌனஞ் சாதித்துச் சிவராஜ யோகத்திலமர்ந்திருந்தார். மார்த் தாண்டன் படும் வேளை வந்தது. ஹரஹர! "சைவமார்த்தாண் டர்" அத்துவிதானந்தத்தை யுற்றார்.

"செய்யுந் திருவொற்றி யூருடை யீர்திரு நீறுமிட்டுக்
கையுந் தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே."?

ளன்? அவர் வாக்கு சாதுரியத்தையுந் தீர விசேடத்தையும் வாத கம்பீரத்தையுந் தெரிய விரும்பாத வேதபாஹ்ய னெவனுளன்? ஆகவே அவர் பிரதாபத்தை யிடங்கொடுத்த வரையில் ஒருவாறு சுருக்கி யெழுதலாயிற்று. விஷயங்கள் தொடர்ச்சியா யிராவிடின் உலகம் நம்மைப்பொறுக்க.

## பிறப்பு வளர்ப்பு.

நமது நாயகரவர்கள் சென்னைச் சூளையில் நிலைபெற்றிருந்த ஓர் வைணவ குடும்பத்தில் கி. பி. 1846வரு ஆகஸ்டுமீ 6உ ஆதிவாரம் சிம்மலக்கினத்தில் நான்குகோள் உச்சமாகச் சைவத்துறை விளங்கப்பிறந்தனர். அரங்கசாமியெனத் தாய்தந்தையர்களிட்ட பெயரை இவருக்குப் பந்துவான அச்சுதானந்தரெனும் ஓர் சைவ சன்னியாசி மாற்றி சோமசுந்தரமென வழைத்துத்தாம் வளர்த்துச் சிவாதிக்யம் போதித்துச் சைவராக்கி வடமொழி தென்மொழி கற்பித்துவந்தனர். இராஜதானிக் கல்லூரியில் ஆங்கிலமுந் தெலுங்கும் பயின்று பிரவேச பரிக்ஷை வகுப்பு வரையில் வாசித்துக் கொண்டிருந்தார். இன்னணம் நான்கு பாஷைகளிலும் போதிய ஞானம் வருவித்துக்கொண்டு நகர விசாரணைச் சாலையில் உத்தியோகத்தி லமர்ந்திருந்தார்.

## சமய விசாரணை.

அச்சுதானந்தர் ஏகான்மவாதத்திற் பற்றுடையவராய்த் தம் மாணக்கருக்கும் அதையே போதிப்பாராயினர். கற்ற விஷயங்களைத் தம் நுண்ணிய ஆராய்ச்சியாற் சீர்தூக்கிச் சிக்கறுப்பதாகிய பெருங்குண மிவரிடத்திருந்ததாலுஞ் செவியிற்பட்டதை யெல்லாம் நம்பும்பேதைமையில்லாமையாலும் ஏகான்மவாத நூல்களில் தமக்குச் சந்தேகமும் போதனையில் முரணும் நேர்ந்துழி தக்க சமாதானங்கள் கொடுக்கும்படி ஆசிரியரை விடாது நெருக்குவர். நுட்பமான கேள்விகளால் பலமுறை ஆசிரியர் விடையிறுக்க முடியாது மயங்கிய துண்டு. அப்போது நாயகரவர்கட்கு வயது 20 இருக்கலாம். அது புறச்சமயிகள் சைவத்திற்கின்னல் தேடிக்கொண்டிருந்த காலம். கறையான்குட்டை-சபாபதி முதலியார்? என்பவர்க்கிவர் உதவியாயிருந்து பிரசங்க வாயிலாய்ச் சைவசமய உண்மையினைப் பிரகாசப்படுத்திக்கொண்டிருந்தார். இவரது சிவநேசத்தன்மையை உணர்ந்த மதுரைநாயகம்பிள்ளை யென்பவர் இலவசமாய்க்கொடுத்த மெய்கண்ட சாத்திரத்தை முழுவதுங்கற்று, ஆசிரியர் போதனையி

ளுள்ள வழுக்களை அவர்க்கு எடுத்துக்காட்டி யச்சாத்திரத்தில் பற்றுண்டாகும்படி செய்தார். பின்பு அச்சுதானந்தர் காஞ்சியை யடைந்து ஆதிசைவரிடம் ஆசாரியாபிடேகமுற்று, ஏகாம்பர சிவ யோகியாரெனத் தீக்ஷா நாமம் பெற்றுக்கொண்டனர். நாயகரவர்கள் வைணவத்திற் பிறந்து, பின்பு தமக்கு ஏகான்மவாதம் போதித்த ஆசிரியருந் தாமுஞ் சைவ சித்தாந்த போதகராயினமையை நோக்க, அவராராய்ச்சியின் தெளிவு நன்குபுலப்படும். உத்தியோக நிர்ப்பந்தத்தால் சமய பாதுகாப்புக்குவேண்டு மவகாசங் கிடைக்கப் பெறாமையின் தஞ் சுயநலத்தையும் போற்றாது 1881௵ வேலையை விட்டு நீங்கினார்.

## நூலாசிரியர் தன்மை.

நாயகரவர்கள், சற்றேறக்குறைய 100 சத்கிரந்தங்கள் இயற்றி யுள்ளார். அவைகளில் "வேதபாஹ்ய சமாஜகண்டநம்" என்னும் முதல் நூல் 1868௵ ஆகஸ்டுமீ வெளியாயிற்று. சுந்தர சிவாசாரியர் என்பவர் பெயரால் தாம் இயற்றிய சிவாதித்ய ரத்நாவளி க-ம் பாகத்திற்கு உ-பாகம் பின்பு இயற்றி 1873௵ வெளியிட்டு அந்நூலைப் பூர்த்தி செய்தார். அந்நூலுடன் அவர் புகழும் வெளியேறிற்று. அவரியற்றிய மற்றைய நூல்கள்: சைவசூளாமணி, பரதத்துவப் பிரகாசிகை, பிரம்மதத்வ நிரூபணம், அர்ச்சாதீபம், ஆதிசைவப்பிரபாவம்,சித்தாந்த ரத்நாகரம் சித்தாந்த ஞானபோத முதலியனவாம். பிந்திய விரண்டுஞ் சஞ்சிகை ரூபமாய்ப் பல அருமை நூல்களை யுள்ளடக்கி வெளிப்போந்தன. அவற்றின் அந்தம் "மெய்கண்டசிவ தூஷண நிக்கிரஹம்" என்னு முண்மை நூல். இது அவருடைய இறுதிக்காலத்திற்கு 6-திங்கள் முந்தி வெளிப்பட்ட நூல். ஆக 33 வருஷம் கிரந்தகர்த்தரா யுழைத்தாரென்பது தெரியவருகிறது. இவர் நூல்களை இரண்டு பெரும் பிரிவுகளாக்கலாம். ஒன்று, சைவத்தின் பெருமையைக் கூறுவது; மற்றொன்று, புறமதங்களின் புறங்கூற்றுகளை விசாரித்து அம்மத சொரூபங்களிலுள்ள வழுக்களை யெடுத்துக்காட்டுவது. அப்பைய தீக்ஷித சுவாமிகளும் இவ்வாறே சுயமதஸ்தாபனமாகவும் புறமத பங்கமாகவும் நூலியற்றி யுள்ளாராதலினாலும்,புறமதத்தினர்க்கு நல்லறிவுச் சுடர் கொளுத்தவேண்டுமென்ற காருண்ய மேலீட்டாற் பல கிரந்தங்களை நாயகரவர்கள் சலியாமல் இயற்றியதாலு! மவருக் கழியாப்புகழும்

பொதுவதிகாரத்துள் இலக்கணவியலாகிய ஆறுஞ்சூத்திரத்தால் "உணருருவசத்து" எனவும் "இருதிறனல்லது சிவசத்து" எனவும் கூறி அசத்தினிலக்கணத்தையும் சிவசத்தினிலக்கணத்தையும் வரை செய்துணர்த்திய ஆசிரியர், இது அசத்து, இது சிவசத்து என்று அறியும் பொருள் அவ்விரண்டினுள் ஒன்றோ வேறோ என்னும் ஐயம் நிகழாமைவேண்டி, அச்சூத்திற்குப் புறனுகவெடுத்து உண்மையதிகாரத்துச் சாதனவியலாகிய இவ்வேழாஞ் சூத்திரத்தில் சத்து அசத்து என்னும் அவ்விரண்டினையும் அறிவதும் அவ்விரண்டின்வேருனதுமான (அதாவது சத்தும் அசத்தும் அல்லாததுமான) சதசத்தாகிய உயிரின் இயல்பை யுணர்த்துமுகத்தால் சாதனஞ்செய்து பயன்பெறுதற்குரிய அதிகாரியின் இயல்பை உணர்த்துகின்றார்.

"சத்தெதிர் யாவையுஞ் சூனியம்" என்றது சுட்டுணர்வின்றி நின்றறியுஞ் சிவசத்தின் முன்னர்ச் சுட்டியறியப்படும் அசத்தாய பிரபஞ்சம் விளங்கித் தோன்றாமையை; (இல்லாமையை யன்று.) விளங்கித் தோன்றாமையாவது,—இது குடம் இது ஆடை யென நம்மவராற் சுட்டியறியப்படுவதுபோல் முதல்வனாற் சுட்டியறியப்படுவதாய் வேறு நில்லாமையாம். முற்றுணர்வுடைய முதல்வனுக்கு அசத்தையறியும் சுட்டுணர்வும் உண்டென்பதனால் வரும் குற்றம் யாதெனில், தன்னியல்பாகிய இயற்கையுணர்வின்முன் பொதுவியல்பாகிய செயற்கைச் சுட்டுணர்வு பிரகாசித்து நில்லாமையால், முதல்வனுக்குச் சுட்டுணர்வும் உண்டென்பது அறியாதார் கூற்றாம்.

சத்தே என்பதில் ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது.

சிவமும் பிரபஞ்சமும் ஆகிய இரண்டும் ஒள்றினையொன்று அறியாதென விலக்கவே, எஞ்சிய உயிரே அவ்விரண்டினையும் அறியும் என்று கூறுதல் பாரிசேட அளவையாகும். உயிர் சத்தாகவேனும் அசத்தாகவேனும் தனித்து நிற்றலன்றி சார்ந்ததன் வண்ணமாயிருந்து (அதாவது சத்தொடு கூடிச் சத்தாயும் அசத்தொடு கூடி அசத்தாயும் நின்று) சத்து அசத்து ஆகிய இரண்டினையும் அறிதலால் சதசத்து என்னப்பட்டது.

## இச்சூத்திரத்தின் அதிகரணங்கள்.

1-வது:—யாவையுஞ் சூனியஞ் சத்தெதிராகலிற் சத்தே யறியாது.

2-வது:—அசத்திலதறியாது.

3-வது:—இருதிறனறிவுள திரண்டலாவான்மா.

## இச்சூத்திரத்தின் சூர்ணிகை.

1-வது:—அரன் பாசத்தை அநுபவியான்.

2-வது:—பாசம் அரனை அநுபவியாது.

3-வது:—உயிர் அவ்வரனை யடையும்; அநுபவிக்கும்.

## இச்சூத்திரத்தின் வார்த்திகம்.

1-வது:—ஈண்டுச் சத்தினிடத் தசத்துப் பிரகாசியாது என்றது—மெய்யினிடத்துப் பொய் அப்பிரகாசமாய் நிற்றலான்.

2-வது:—இனி அசத்தினுக்கு உணர்வின்று என்றது—அது தான் நிரூபிக்கில் இன்றாகலான்.

3-வது:—இனி இருதிறனறிவுள திரண்டலா வான்மா என்றது—இவ்விரண்டினையும் அறிவதாய் உபதேசியாய்நின்ற அவ்வறிவு இரண்டின்பாலு முளதாயுள்ள அதுவே அவ்வான்மாவாம் என்றது.

## இச்சூத்திரத்தின் உதாரணவெண்பா ஐந்து.

# சைவாசார போதம்.

(ஆத்துக்குடி சைவசித்தாந்த சபா பிரசுரம்.)

---

நம்மவர்களிற் பெரும்பாலார் சைவசமய மித்தன்மையது, சைவநூல்கள் இன்ன இன்னவை, சைவர்கள் இத்தன்மையர் என்பதைச் சிறிது முணராது, முடிசார்ந்த மன்னரு மற்றுமுள்ளோரு முடிவிலொரு பிடி சாம்பலாய்வெந்து மண்ணாவதைப் பிரத்தியக்ஷத்திற் கண்டும், மின்போலழியுஞ் சரீரத்தைக் காப்பதற்கே சதா வுழைத்து வருவாராயினர். தர்க்க சாஸ்திரந் தத்துவ சாஸ்திரங்களுக்கு ஒரு சிறிது மொவ்வாதனவும், விவேகிகளெல்லா மருவருப்பனவுமான சமயங்களை யநுட்டிப்பவர்களை நோக்கி யுங்கள் சமயக் கோட்பாடுகள் யாவையெனின் 100-க்கு 95-பேர் தமது ஆபாச மதத்திலுள்ள விஷயங்களையாவது தெளிவாய்ச் சொல்லப் பின்னில்லார். இனி நம்மவரை நோக்கி யுயர்ந்த கேள்விகளல்லாவிடினும் "நீர் சைவரா, சைவரென்ற நாமம் எதனால் வந்தது" என்ற

என்பதிற் கிஞ்சித்தும் பிழையாம லாற்றதை நோக்க நாயகரவர்கள் தெய்வீகத் தோற்றமும் சிவப்பிரீதி மறைவுமுற்றாரென்பதே துணிபு.

சென்னை, முல்லாவீதி. நின்றை. தங்கவேலு முதலியார்.

---

## சிவஞானபோதம்.

### ஏழாஞ்சூத்திரம்.

யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராகலிற்
சத்தே யறியா தசத்தில தறியா
திருதிற னறிவுள திரண்டலா வான்மா.

இந்நூற் சூத்திரம் பன்னிரண்டனுள் முதல் ஆறு சூத்திரம் பொதுவதிகாரமும், பின் ஆறு சூத்திரம் சிறப்பதிகாரமுமாம். பொது அதிகாரச் சூத்திரம் ஆறனுள் முன்மூன்று பிரமாண இயலும், பின்மூன்று இலக்கண வியலுமாம். சிறப்பதிகாரச் சூத்திரம் ஆறனுள் முன்மூன்று சாதனவியலும், பின்மூன்று பயனியலுமாம். பொது அதிகாரம் தூலாருந்ததி நியாயம் பற்றி (அதாவது கண்ணுக்கு எளிதிற் புலப்படாத சூக்குமமாகிய அருந்ததி நட்சத்திரத்தைக் காட்டவேண்டில், அதனருகே யுள்ள தூலமான நட்சத்திரம் ஒன்றைக்காட்டி அதன்மூலமாய் அவ்வருந்ததியைக் காட்டுமாறுபோல) முப்பொருளின் இயல்பை பிரமாணத்தாலும் இலக்கணத்தாலும் உணர்த்துவது. சிறப்பதிகாரம் அதனைச் சாதனத்தாலும் பயனாலும் உணர்த்துவது. சிறப்பியல்பு பொது வியல்பு போல் இடையே நீங்குதலின்றி, எக்காலத்தும் ஒரு தன்மைத்தாயிருத்தலினால் அதனைக்கூறும் சிறப்பதிகாரம் உண்மையதிகாரம் எனப்படும்.

ஆராய்ச்சி அறிவால் அறிவது பொதுவும், அநுபவ வறிவால் அறிவது சிறப்புமாம். அன்றியும் பொது வியல்பு தூலநிலையும், சிறப்பியல்பு சூக்குமநிலையுமாம். இவை முறையே தடத்தநிலையும் சொரூபநிலையும் எனினும் பொருந்தும். பதிக்குப் பொதுவியல்பு உயிர்களோடு அத்துவிதமாய்க் கலந்திருத்தல்; சிறப்பியல்பு சச்சிதானந்தமயமாய் நிற்றல். பசுவுக்குப் பொதுவியல்பு கருவிகரணங்களோடு கூடியிருத்தல்; சிறப்பியல்பு அவற்றினின்றும் நீங்கி உடனாய் நிற்கும் சிவமாய் நிற்றல்; பாசத்துக்குப் பொதுவியல்பு காரியரூபமாய் நிற்றல்: சிறப்பியல்பு காரணரூபமாய் நிற்றல்.

பொது வதிகாரத்தில் பிரமாணவியலினல் முப்பொருளுண்மை (அதாவது பதிபசுபாசம் என்னும் முப்பொருள் உண்டு என்பது) சாதிக்கப்பட்டது. இலக்கணவியலினல் முப்பொருளின் இலக்கணம் கூறப்பட்டது.

உண்மையதிகாரத்தில் சாதனவியலினல் அம்முப்பொருள்களுள்ளும் விலக்கவேண்டியதை விலக்கி அதனல்வரும் துன்பத்தினின்றும் நீங்குதலும், கொள்ளத்தக்கதைக் கொண்டு அதனல் வரும் இன்பத்தையடைதலுமாகிய பயன் பெறுவதற்கேதுவாகிய சாதனம் செய்யுமாறு கூறப்படுகின்றது. பயனியலால் பாசவீடும் சிவப்பேறுமாகிய பயனியல்பு கூறப்படும்.

இவ் வேழாஞ் சூத்திரம் உண்மையதிகாரத்துள் சாதனவியல் முதற் சூத்திரமாம். சாதனஞ் செய்தபின்னரே பயனுண்டாமாதலினல், இவ்வதிகாரத்தில் சாதனவியல் முன்னும் பயனியல் பின்னுமாக வைக்கப்பட்டது.

ஒன்றினை யறிந்தபோது அதனலாய பயன் பெறுதற்குரிய முயற்சிசெய்யலுறுவார்க்கு அதனைச் சாதிக்குமாற்றல் தமக்குண்டென்பதும், சாதித்ததனல் வரும்பயன் இது வென்பதும், அப்பயனைவிளைத்தற்குரிய சாதனம் இது வென்பதும், அப்பயன் வரும்வழியும் உணர்ந்தாலன்றி, முயற்சிசெய்ய மனமுண்டாகாதாதலால், இவ்வியலில் ஒதப்படும் சாதனஞ்செய்து அச்சாதனத்தாலாகும் பயனையடைதற்குறிய அதிகாரியினியல்பை யுணர்த்தும் இச்சூத்திரம் சாதனவியலில் முன்னர் வைக்கப்பட்டது.

---

(ஏழாஞ் சூத்திரப்பொருள்)—சத்தெதிர் =(வாக்குமனதீதமாகிய) சிவசத்தின் சந்நிதியில்—யாவையும் சூனியம் ஆகலின் = (உணருருவாகிய) அசத்தெல்லாம் பாழாகலின்—சத்தே அறியாது = சத்தாகிய சிவம் (அசத்தாகிய பிரபஞ்சத்தை) அறியாது—அசத்து இலது அறியாது = அசத்தாகிய பிரபஞ்சம் அறிவில்லாத சடமாதலினல் சத்தாகிய சிவத்தையறியாது.—(ஆதலாற் பாரிசேட அளவையால்)—இருதிறன் அறிவுஉளது—இருதிறன் அறிவுள தொன்று உண்டென்பது பெறப்படும்.(அதாவது சத்து அசத்தாகிய இரண்டினையும் அறியும் அறிவையுடைய ஒருபொருள் உண்டென்பது பெறப்படும்)—ஆதலால் அப்பொருளே,—இரண்டலா ஆன்மா = சத்தாதலும் அசத்தாதலும் ஆகிய இரண்டு மன்றிச் சதசத்தாயுள்ள உயிராம். (எ-று.)

சாதாரண கேள்வியைக் கேட்போமானால் விபூதி பூசுவதாற் சைவரென்று சிலரும், அதனோடு உருத்திராக்ஷமணிவதால் சைவரென்று சிலரும், மாமிச போசனம் விலக்குவதால் சைவரென்று பலருமாக 100-க்கு 95-பேர் வரையில் விடை பகர்வர். அதனை இன்றும் பரிக்ஷித்தறியலாம். அவ்வண்ணம் நம் சமயிகள் பெறுதற்கரிய பெரும் பேறு பெற்றும் அப்பெயர் வந்த காரணத்தைச் சற்றுமறியாதிருப்பரேல் புறச் சமயிகள் நுங்கடவுள் ரூபியா? அரூபியா? ஒருவரா? பலரா? ஒருவரேல் நாயக நாயகி பாவகமாய்ப் பல தெய்வ வழிபாடு செய்வதெற்றுக்கு? விக்கிரக வணக்கம் எதனாற் கடவுள் வணக்கமாம் என்பவைமுதலிய வினாக்களை வினவின் எங்ஙனந் தக்க விடை பகர்ந்து கேட்போர் வாயை அடக்கப்போகின்றார்கள். இவ்வினாக்களுக்கு மற்றைய புன் சமயிகளைப்போல் பிரமாணமற்ற போலிவிடைகள் தாம் புகல வேண்டுமோ? அற்றன்று. நமது மதசாஸ்திரங்களில் சிறிதாராய்ந்த பாலரும் எளிதாய் விடை பகரற்பாலனவே. அவ்வாறாகவும் நம்மவருள் பலருக்கும் நம் சமய உண்மை புலப்படாதிருப்பதற்குக் காரணந்தான் யாதெனின், கல்விச்சாலைகளில் நம் சமய நூல் கற்றுக்கொடாமையும், நமது ஆலயங்களில் சைவப் பிரசங்கஞ் செய்வியாமையும், சமய பரிபாலனத்துக்கென்று நம் முன்னோரிடத்தில் அளவிறந்த திரவியங்களைப் பெற்றுக்கொண்ட மடாதிபதிகளுள்ளும் மற்றுந் தீக்ஷா குருமார்களுள்ளும் பலர் சைவாகம சாஸ்திரங்களை யுணர்ந்து சீஷர்களுக்குப் போதிப்பாராகாமல் லௌகிக விவகாரங்களில் மனதைச் செலுத்துகின்றவராயினமையுமே. இது நிற்க, சைவநாமம் வந்த காரணமியாது, சைவர்தாம் யாவர் எனின் சைவம் சிவ சம்பந்தம். சைவர் சிவ சம்பந்தத்தைப் பெறுபவர். சிவ சம்பந்தஞ் சிவ தீட்சையின்றி யெய்தாதாதலின் சிவ தீட்சை பெற்றவரே சைவரெனப்படுவர். அத்தீட்சை பெறுதற்குத் துராசாரங்களை யொழித்தவரே தகுதியானவர். அவரும் வருணபேதத்தால் அறு வகைப்படுவர். அப்பேதம் வருமாறு: அநாதியே மல (அஞ்ஞான) சம்பந்திகளாயுள்ள ஆன்மகோடிகளைச் சிவ சம்பந்திகளாய்ச் செய்தற்பொருட்டுக் கருணையே திருவுருவாயமைந்த சிவபெருமானது திருமுகத்திலுற்பவித்து அப்பெருமானால் தீட்சிக்கப்பட்ட பிராமணர்கள் ஆதிசைவர்; பிரமதேவர் முகத்திலுற்பவித்து அவ்வாதி சைவர்களால் தீட்சைசெய்யப்பெற்ற பிராமணர் மகா சைவர்; அவர்களால் தீட்சைசெய்யப்பெற்ற க்ஷத்திரியரும், வைசியரும் அநுசைவர்,

அவர்களால் தீட்சை செய்யப்பெற்ற சூத்திரர் அவாந்திர சைவர்; அவர்களால் தீட்சைசெய்யப்பெற்ற அனுலோமர் பிரவரசைவர்; பிரதிலோமர் அந்ய சைவர் என அறிக. இங்ஙனங் கூறியவாற்றால் சிவதீட்சை பெற்றவரே சைவரெனவும், பெறாதவரே அசைவரென வும் பெறப்படுகின்றது; ஆனால் முதல் நாலு சைவருள்ளும் ஆசா ரியாபிஷேகம் பெற்றுக்கொண்டவரே தத்தம் வருணத்தவர்க்கும் தீட்சைசெய்விக்கும் அதிகாரமுடையவராவர். இனி நம்மவருள் அநேகர் விருத்தாப்பிய பருவம்வரை சிவதீட்சை பெறாமல் தங்க ளைச் சைவரென மதித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எத னால் சைவர்களானார்களோ வறியோம். இதுவரை யாதுகாரணத் தாலோ தவறினுந் தவறுக. இனி மேலாயினும் கூடிய சீக்கிரத் தில் இல்லறத்திற் கின்றியமையாத தங்கள் இல்லாளோடுந் தீட்சை பெற்றுத் தாங்கள் சைவராவதுமன்றி, தங்கள் மக்களுக்குந் தீட்சை செய்விக்காமல் விவாகம் செய்விக்கிறதில்லையென்ற விரதமுடைய வர்களா யிருக்கவேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம். மேலும் நமது சமயத்தவர்கள் அவசியந் தெரிந்துகொள்ள வேண்டிய எத் தனையோ அருமையான விஷயங்களிருக்கின்றமையால் அப்படிப் பட்ட விஷயங்களைப் பிரசங்க மூலமாயும் சிறுபத்திரிகை மூலமா யும் வெளிப்படுத்துவதற்கென்றே இவ்வூரில் ஏற்பட்டிருக்கிற சைவ சித்தாந்த சபையைப் பரிபாலித்து வருவான் பிரதி உபகாரம் கரு தாது உழைத்துவரும் எங்கள் வேண்டுதலையும் நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றோம்.

---

## திருவிளையாடற் புராணம்.

### இசைவாதுவென்றபடலம்.

—o—

மதுரைமாநகரில் ராஜராஜபாண்டியன் முடிசூடி அரசாண் டகாலத்தில் அவனுக்குக் குலபத்தினிகளனேகரும் காதற்பரத் தைக ளனேகரும் இருந்தார்கள். இவர்களுள் ஒரு பரத்தை அந் தப் பாண்டியனுக்கு அமுதும் ஆவியும் போன்றவளாயும் அவன் மகிழ மதுரகீதம் பாடும் வித்தையில் வல்லவளாயுமிருந்தாள். அவள் தனக்கும், மதுரேசர் விறகுவிற்று ஆட்கொண்ட பாணபத்தி ரர் பத்தினியாருக்கும் கீதம்பாடும் விஷயத்தில் பகையுண்டாகி பத் திரர் மனைவியாருக்கெதிராக இன்னுமொரு பாடகியை வரவழைத்து விட்டுப்பாடி அவரை கருவபங்கம் பண்ணவேண்டுமென்று பாண்டி-

யனுக்குத் தெரிவித்தாள். அவன் அவள் சொல்வழி நடந்தவனானகை
யாலே ஈழநாட்டில் நின்றும் ஒரு சமர்த்தியான பாடகியை வரவ
ழைக்க, அவள் பாண்டியனைக்கண்டுவணங்கி ஒரு புறத்திலிருந்து
கின்னரமங்கைபோலவிஞ்ஞானம் பண்ணிநிற்க, அவள்மேல் மனஞ்
சென்ற பாண்டியன் பழிநோக்காமல் அவளைப்பார்த்து "நீ இப்
போது உன்னுடன் பாடவருகிற பத்திரன்மனைவி பக்ஷமாக நாங்கள்
பேசினாலும் நீ விடாமல் அவள் வெட்கும்படி ஆணையிட்டு மறித்துப்
பாடி வெல்லவேண்டும்" என்று சொல்லி, பின்பு "நீ நாளைக்குவா"
என்று விடைகொடுத்தனுப்பிவிட்டு பத்திரர்மனைவியை வரவழை
த்து உள்ளொன்று வெளியொன்றாக "என்னோடும் பாடவல்லவளு
முண்டோவென்று கருவங்கொண்டு ஒருத்தி வந்திருக்கிறாள். அவ
ளோடு நீ பாடவல்லையோ" என்று கேட்டான். அதற்கு "ஐயா
பாண்டியமஹாராஜனே! எனது கற்பும்மதுரேசன் கருணையும் நிலை
கொண்டிருக்கையாலே வந்தவளோடுபாடி வெல்வதேயல்லாமல்
நான் பயந்திருக்கிறவளல்ல" வென்று பத்திரர் மனைவியார்சொல்ல
பாண்டியன் அவரையும் நாளைக்கு வாவென்றனுப்பி விட்டு மற்றை
நாள் பாண்டியன் சபையிலே இரண்டு பாடினிகளையும் வரவழைத்
துப் பாடவிட்டான். பாடல் கேட்குமுன்னே யாழ்ப்பாணத்திலி
ருந்து கப்பல் வழியாகவந்த பாடினி பத்திரர் பத்தினியைப் பார்த்
திகழ்ந்து "குற்றமெத்தனை, குணமெத்தனை, வீணைக்குத்தெய்வம்
யார், முன்னே இசைப்பது எந்தவுயிர், உயிரளவெத்தனை, மெய்யள
வெத்தனை, உயிர்மெய்யளவெத்தனை இவைகளுக்கு மறுமொழி
சொல்லிப்பின்பு நீசமர்த்தியானால் என்னோடுபாடு, இல்லாவிட்டால்
நீ தோற்றவள்" என்று சொன்னாள். அதற்குப்பத்திரர் மனைவியார்
"கப்பலி லிருந் திறங்கிவந்த பெருமையும், வித்தையும், வாதஞ்
செய்வதில் உற்சாகமும், யாரும் ஆசைப்படத்தக்க உன் பெண்மை
யழகின் செருக்கும் இந்த ராஜகுமாரன் முன்னே உன் வாயைத்
திறவாவிட்டால் எப்படி விளங்கும். எடி பெண்ணே, உன்னோடு
இசைவாது வெல்ல நான் ஒப்புவேனே யல்லாது சும்மா வாய்ச்
சண்டை செய்ய நான் எதிரியல்லேன். உன்னைப்போலே மானம்
விற்றுண்டு பிழைக்கும் வேசிகளே வாய்ச்சண்டைக்குத் தக்கவர்
கள்" என்று பத்திரர் பத்தினி மறுமொழி சொன்னார். அப்போது
பாண்டியன் அவ்விருவரையும் சண்டை விலக்குகிறவன்போலே
விலக்கி "இப்போது நீங்களிருவரும் பாடுங்கள். தோற்றவள் வென்
றவளுக்கு அடிமையாவதே சபதம்" என்று ரோஷமுண்டாக்கி

விடவும், ஈழநாட்டுப் பாடினியானவள் முந்தி வீணையை இடதுதோளிலே சார்த்தி அவள் குரலின் படியே கைவிரல்கள் தந்தியைத் தெறிக்க, பெருமிதநகை உள்ளே நின்று சிறிது தோன்ற, ஏழிசைப் பாடலை ராஜகுமாரன் காதுக்கின்பமாக மழலையமுதம்போலப் பாடினாள். பத்திரர்மனைவியார் வீணையைக்கொண்டு முறுக்காணிகளை முழக்கிச் சுதிகூட்டி யக்ஷக்கின்னரர்கள் நாண விரல்கள் செல்லும் வழியே நாவில்வருகிற இன்னிசை யமுதத்தைப் பலருங்கேட்கப் பாடினார்.

அப்போது பாண்டியன் மனக்கருத்தைச் சபையோர் தெரியாமல் பாணபத்திரருடைய மனைவியார் பாடினபாடலை மெச்சிக் கொண்டாடினார்கள். பாண்டியன் இலங்கையிலிருந்துவந்த பாடினி பாடலை மெச்சிக்கொண்டாடினான். பின் அவன் கருத்தைத்தெரிந்து சபையார் பாண்டியன் கொண்டாடியபடியே இலங்கைப்பாடினி பாடலைக் கொண்டாடினார்கள். மன்னவனெப்படி மன்னுயிரப்படி என்கிறபடியே கொண்டாடின சபையாரைப் பார்த்துப் பாண்டியன் தனக்கு இன்பமான பரத்தையின் போதத்தைக் கேட்டு நீதிதவறி இன்று ஒருநாளிலே "உங்கள் இருவர் பாடலையும் தெரிந்துசொல்லக்கூடுமோ போய் மறுபடியும் வாருங்கள்" என்றனுப்பிவிட்டான். இலங்கைப்பாடினியானவள் பாண்டியன் தன்னை மெச்சினதேவென்றியாகக்கொண்டு பெருங்களிப்படைந்து தன்னிடத்துக்குவந்து தூங்குமஞ்சத்தின்மேலிருந்து இளைப்பாறிக் கொண்டிருந்தாள். இப்பால் பத்திரர் பத்தினி மீனாட்சிசுந்தரேசர் திருவடிகளைவணங்கி வருந்திநின்று கண்ணீரொழுக அழுது "ஸ்வாமி, சோமசுந்தரபாண்டியனாகி நீதி செலுத்தினகடவுளே, இந்தப்பாண்டியன் பக்ஷபாதமான வழக்குச்சொல்ல வுடன்பட்டான், சபையாரும் அவன் சொன்னபடியே சொன்னால் எப்படி நீதிவிளங்கும். ஆனதினாலே உம்முடைய திருவருளாகிய துணைசெய்து எனக்குவந்த பகையை வெல்ல அருள்செய்யவேண்டும்" என்று வேண்ட சுந்தரேசர் அசரீரிவாக்காய் "பெண்ணே, நீ பயப்படாதே, நாளைக்கும் நீயே வெல்லும்படி செய்கிறோம், போ"வென்ன, பத்திரர்மனைவியார் வீட்டிற்குப்போயிருந்தனர். மற்றைநாள் பாண்டியன் அந்த இரண்டு பாடினிகளையும் வரவழைத்து முன் சொன்னபடியே சொல்லிப் பாடுங்களென்ன சபையாருமப்படியேசொல்ல, அப்போது பத்திரர் மனைவியார் "ஐயா, பாண்டியராஜனே நீரே பக்ஷபாதமான நியாயம் சொல்

னாகிறீர். சபையாரும் அப்படியே சொல்லுகிறார்கள். ஆனதினால் தராசுமுனைபோல நியாயஞ்சொல்லுதற்கு நம்முடைய கடவுள் சந்நிதிமுன்னே நின்றுபாடினால் இருவர் பாட்டையுங்கேட்டு யாராகிலுமொருவர் இன்னாள் வென்றாளென்று சொன்னாற்போதும். ஆகையால் அப்படிச் செய்யவேண்டும்” என்ன, அதற்குப்பாண்டியன் அப்படியே நாளைக்குச் செய்யுங்களென்று விடைகொடுத்தனுப்பிவிட்டான். மறுநாள் பாண்டியனும் மந்திரிகளும் தர்மார்த்தகாமமோக்ஷமென்னு நான்கு புருஷார்த்தங்களையுந் தெரிந்த பெரியோர்களும் கூடிப்போய் வெள்ளியம்பலவாணர் மண்டபத்திலிருந்துகொண்டு அந்த இரண்டு பாடினிகளையும் கூட்டிவாருங்களென்ன ஏவலாளர் விரைவிலோடி அழைத்துவந்தார்கள். அப்போது இலங்கைப்பாடினி இந்தக்கிழவி இன்றுதோற்று எனக்கடிமையாவதற்குச் சந்தேகமில்லையென்று மனக்களிப்புடனே முன்னேவந்தாள். பத்திரர்மனைவியார் தனது கற்பும் கடவுள் திருவடிமேலன்பும் நிலையாகக்கொண்டு வந்தனர். அப்போது சோமசுந்தரக்கடவுள் முத்தாரங்களும் ரத்தினகேயூரங்களும் இன்னும் பலவித ஆபரணங்களும் விளங்க அலங்கிருதராய்த் தாமும் ஒரு வித்துவானாகிப் பெரியோர்கூட்டத்திற்கூடி வந்திருந்தார். அப்போது கப்பலிலிறங்கிவந்தவள் முன்னேபாட அதுகேட்டுச்சபையார் ஒன்றுங்கொண்டாடாமற் பேசாதிருந்தார்கள். அப்போது பத்திரர் மனைவியார் சரஸ்வதிபோலிருந்து வீணையைக்கொண்டு பாடினார். எப்படி யென்றால்.

குடங்கை நீரும் பச்சிலையு மிடுவார்க் கிமையாக் குஞ்சரமும்
படக்கொள் பாயும் பூவணையுந் தருவாய் மதுரைப் பரமேட்டீ
படக்கொள் பாயும் பூவணையுந் தருவாய் கையிற் படுதலைகொண்
டிடங்கடோறு மிரப்பாயென் றேசு வார்க்கென் பேசுவனே

தேனார் மொழியார் விழிவழியே செல்லா தவர்க்கே வீடென்று
நானா வேதப் பொருளுரைத்தாய் நீயே மதுரை நம்பரனே
நானா வேதப் பொருளுரைத்தாய் நீயே பாதி நாரியுரு
வானா யென்று பிறர்பழித்தா லடியேன் விடையே தறைவேனே

வரத னாகி யெவ்வுயிர்க்கு மாயா விருத்தி வலியடக்கிச்
சரத மான வீட்டின்பந் தருவாய் மதுரைத் தனிமுதலே
சரத மான வீட்டின்பந் தருவாய் வீடு பெறுவார்போல்
விரத யோக நிலையடைந்தா யென்பார்க் கென்னான் விளம்புவனே.

என்று மதுரேசரைத் தியானித்து இசைப்பாட்டாலே சுனிந்து பண்ணுதல் பரிவட்டனை முதலாக இசைநூலிற்சொல்லிய தொழில்களெட்டும் வார்தல் வடித்தல் முதலாகிய இசைக்கரணங்களெட்டுந்தோன்ற மண்ணுலகத்தார் செவிகளுக்குமேயல்லாமல் விண்ணுலகத்தார் செவிகளுக்கும் இன்னிசையாகிய வமுதத்தை வார்த்தனர். இப்படி இடைபிங்கலை'இயங்காமல் மூலாதாரம்தொடங்கி அசைந்து பொதுவான தொழிலால் பிரமரந்திரபரியந்தம் நடக்க இசைக்கு முள்ளாளமிடறு வீங்காமலும், கண்களிமையாமலும், பல்தோன்றாமலும், புருவம் மேலே நிமிராமலும், கொடிறு துடியாமலும் பாட எல்லோருங்கேட்டுக் குதூகலங்கொண்டு மெச்சத்தொடங்கும்போது பாண்டியன் முன்னே தான் கொண்டாடினவனையே கொண்டாட நினைத்தான். அப்போது சோமசுந்தரக்கடவுளருளாலே பாண்டியன் மனக்கோணல்தீர்ந்து பத்திரர்பத்தினியாரே நன்றாய்ப்பாடினாரென்றுமெச்சி இலங்கைப்பாடினி கழுத்தின்மேலே பத்திரர் மனைவியைக் கொண்டுவந்து ஏற்றுங்கள் என்று சொல்லும்போது வித்துவானாய் வந்திருந்த கடவுள் இந்தப் பத்திரர்மனைவி பாடலே ஆச்சரியம் ஆச்சரியமென்று கொண்டாடி சபையார் காண அப்பொழுதே மறைந்தருளினார். அதுகண்ட சபையாரெல்லோரும் அதிசயித்தார்கள். பாண்டியன்பயந்து இது விடைமேலழகர் திருவிளையாடலென்று தெரிந்து சபையாரும் பாண்டியனும் அடியவரன்பையும் இறைவரருளையும் வியந்து ஆனந்தக் கண்ணீர் பெருகப் பேரின்பக்கடலில் மூழ்கினார்கள். உடனே பாண்டியன் கப்பலிலிறங்கி வந்தவள் பிடரின்மேலிருந்த பத்திரர் பத்தினியை இறங்கச்செய்து அவருக்கு முன்னே ஆடையாபரணங்கள் முதலான பலவெகுமானங்கள் செய்து, பின்பு கப்பலில் வந்தவளுக்கும் சில வரிசைகள்கொடுத்து ராஜசபைக்குவந்து மீனாக்ஷி சுந்தரேசராகிய வித்துவானுக்கும் ஆபரணாதிகள் முதலான சிறப்புச்செய்து "ராஜாக்கள் பலமெல்லாம் தெய்வபலத்தின்முன்னே நில்லா, அந்தத்தெய்வபலமும் மதுரேசன் முன்னே நில்லா" என்றுசொல்லும் பழமொழி இந்தப்பத்திரர் பத்தினியாலே விளங்கக்கண்டோமென்று அதிசயித்துக் கடவுளிடத்தில் விடைகொண்டு திருக்கோயிலைப் பிரதக்ஷிணம்வந்து ஆடல்பாடல்களுடனே தன்னரண்மனைக்குப்போய் வாழ்ந்து பின்பு சுகுணபாண்டியனென்னும் புதல்வனைப் பெற்று வாழ்ந்திருந்தான்.

இ. கண்ணப்ப முதலியார்.

# ஒரு மெய்யன்பரும் திருப்பணியும்.

சிலர் மெய்யன்பர்கள் அறுபத்துமூன்று நாயன்மார்களை யென்றும், இவர்களைத்தவிர வேறொருவர் எக்காலத்தும் இல்லை யென்றும் எண்ணுகிறார்கள். இப்படி யெண்ணுவது தவறு. மெய்யன்பர்கள் எக்காலத்தும் உண்டு. ஆனால் காலதேசவர்த்தமானங்களுக்கிசைய அதிகமாகவேனும் குறைவாகவேனு மிருப்பார்கள். இக்காலத்திலும் மெய்யன்பர்கள் இல்லாமற்போகவில்லை. இக்காலத்தில் நாம் கண்ட மெய்யன்பர்களுள் ஸ்ரீமான் ஐயப்பந்தாங்கல் த. சபாபதி முதலியார் என்பவர் ஒருவர் உளர். இவர் சேக்கிழார் சுவாமிகள் திருவவதாரத் தலமாகிய குன்றத்தூருக்கருகிலுள்ள ஐயப்பந்தாங்கல் என்னும் கிராமத்தில் வசிக்கும் பரம்பரைச் சைவ வேளாளர். வடதிருமுல்லைவாயில் ஸ்ரீமாசிலாமணீசுவரரைத் தமது ஆத்யார்த்தமாக வழிபடும் நியமமுடையவர். இவர் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் அத்தலத்தில் வழிபாடு செய்த தினத்தில் இவர்களைச் சந்தித்து, அன்பின்மேலீட்டினால் இவர்களைச் சிவகணங்களாக மதித்து, இருகண்களும் நீர்சொரிய விம்மியழுது வணங்கி, அதுமுதல் இடைவிடாது திருக்கூட்டத்துடன் அளவளாவிப் பல சிவதலயாத்திரைகள் செய்தனர். ஒவ்வொரு யாத்திரையிலும் சிவலிங்கப் பெருமானாதி பஞ்சமூர்த்திகளுக்கும் சபாபதியாதி ஏனையமூர்த்தங்களுக்குஞ் சாத்துமாறு மல்லிகை முல்லை இருவாட்சி சாமந்தி முதலிய மலர்களால் பூமாலைகள் புனைந்து கொண்டுவந்துகொடுக்கும் நியமத்தை மேற்கொண்டிருந்தனர்.

ஒருநாள் திருக்கூட்டத்தினர் ஈஸ்ட்கோஸ்டு இருப்புப்பாதை வழியாகப்போய் பொன்னேரியிலிறங்கி, அங்கிருந்து சுமார் ஏழு மைலுக்கப்பாலிருக்கும் திருப்பாலைவனத்தைத் தரிசிக்கவேண்டி சென்னையினின்றும் புறப்பட்டுச்சென்றார்கள். இவர் வழக்கப்படி சென்னைக்குவந்து இவர்களுடன் ரெயிலேறிச் செல்லவேண்டி முன்னமே புறப்பட்டுத் தமது தோழர் ஒருவருடன் ஆவடியையடைந்தனர். இது ஐயப்பந்தாங்கலுக்கு ஏழுமைல் தூரத்தில், மதராஸ் இருப்புப்பாதையில் உள்ளது. இதை அடைவதற்குமுன் அங்கிருந்து சென்னைக்குவரும் வண்டித்தொடர் ஆவடியை விட்டுப்போய்விட்டது. அதனால் இவர் தம்து திருப்பணிக்கு முட்டுவருமென்று மிக வருந்தி ஒன்றுந்தோன்றாமலிருந்து பிறகு தமது சரீரத்திற்கு முட்டுவந்தாலும் திருப்பணிக்கு முட்டுவர மனமிசையாராய், அங்கிருந்து நடந்து செல்லத்தலைப்பட்டு, இரவென்றும், காடென்றும், மேடென்றும், கழனியென்றும், கால்வாயென்றும், கல்லென்றும், முள்ளென்றும், துஷ்டசீவ செந்துக்களென்றும் கவனியாமல், ஏறக்குறைய 35-மைல் வரையில் நடந்துசென்று அடுத்ததினம் பகல் 11-மணிக்கு மகாபிஷேக காலத்தில் திருப்பாலைவனமடைந்து இறை

வர் திருமுன் திருப்பூக்கூடையை வைத்துச் சோர்ந்து கீழே விழுந்தனர். (இத்தன்மையுடைய மெய்யன்பர்கள் சிலர் இருந்தமையாற்றான் இத்திருக்கூட்டத்தினர் செய்த யாத்திரை ஒவ்வொன்றிலும் தெய்விகம் விளங்கியது)

இவர் தனியே யாத்திரைசெய்து காசிமுதலிய பல தலங்களைத் தரிசித்தார். இப்போது திருவேற்காட்டில் பல அரிய திருப்பணிகளைச்செய்கின்றார். திருவேற்காடு என்பது திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடைய திருப்பதிகம் பெற்றிருப்பது; மூர்க்கநாயனார் முத்தியடையப்பெற்றது. அம்மையப்பர் அகத்தியர் தரிசிக்கக்காட்டியருளிய திருமணக்கோலத்தோடு வீற்றிருக்கப்பெற்றது. முருகக்கடவுளால் உண்டாக்கியருளிய வேலாயுத தீர்த்தத்தின் பெருமை விளங்கப்பெற்றது. இத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்யின் பேய் பிசாசுகள் அஞ்சியகலும். இத்தலத்தில் விஷஜெந்துக்களால் தீங்குண்டாவது இல்லை. இது முற்காலத்தில் நகரமாயிருந்தது. பின் அவ்வூரவர் செய்த சிவாபராதத்தால் சிறு கிராமமாய்மாறி வேலாயுததீர்த்தம் என்னும் கிணறு கிலமாய்விட்டது. திருக்குளம் தூர்ந்து மனிதர் கையினாற் பரிசித்தற்கு மாகாத சிறு குட்டையாய் மாறிவிட்டது. இடவசதியும் ஜலவசதியும் இல்லாமையால் பிரமோற்சவம் முதலியன நடைபெறாமல் நின்றுவிட்டன. திருக்கூட்டத்தினர் இதையறிந்து வேலாயுததீர்த்தத்தைப் பழுதுபார்த்து, வருடத்திற்கோரே உற்சவமாக நடைபெற்றுவந்த திருவூறல் உற்சவத்தில் தண்ணீர்ப்பந்தர் வைத்து நடத்திவந்தனர். அதன்பின் இத்தலம் நாளுக்குநாள் அபிவிருத்தியெய்தி இப்போது பிரமோற்சவமும் நடைபெற்று வருகிறது. நமது சபாபதி முதலியார் இத்தலத்திற்குவேண்டிய பல வாகனங்களையும் வாகனகிடங்கையும் செய்வித்ததுமன்றி திருக்குளத்திருப்பணியையும் தொடங்கியிருக்கின்றனர். இத்திருப்பணிக்கு ஏறக்குறைய 4000 ரூபா செலவாகக்கூடுமாதலால், இவர் பல சிவநேயர்களை யிதன்பொருட்டு உதவி செய்யுமாறு கேட்டுக்கொள்ளுகின்றனர். யாமும் எம்மாலியன்ற உதவிகளை இவர்பொருட்டும், இச்சிவபுண்ணியத்தின் அருமையை நோக்கியும் செய்துவருகின்றோம். இவ்வாறே பிறர்பலரும் இவருக்கு உதவிபுரிந்து இத்திருப்பணியை நிறைவேற்றுவிக்குமாறு வேற்காட்டீசர் திருவடிகளைத் தியானிக்கின்றோம். இவர் விலாசம்.—பூவிருந்தவல்லியையடுத்த ஐயப்பந்தாங்கலில் ஸ்ரீமான் த-சபாபதி முதலியார்.—(Poonamallee Post.)

(ப - ர்.)

# சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம்.

*　　*　　*　　*　　*

மெய்கண்டதேவர் அருளிய மொழிப்புரை மகாதபபாதுலாகிய சிவஞானமுனிவர் சிற்றுரை என்பவற்றோடு, நற்றமிழ் நடையில் எழுதப்பெற்ற விளக்கவுரையுங் கூடித் தற்காலம் அச்சுவாகனத திவர்ந்துவந்த சிவஞானபோதத்தையான் பன்முறைபடித்து மனமகிழ்ந்தேன்.

இந்நூல், பற்பல விளக்கமும், அபிதானிக விளக்கமும், சமயநாம அட்டவணையும் பிறவும் ஒருங்கே சிவணிப் பெரும்போதமாகயாவருக்கும் இன்பூட்டுகின்றது.

இங்ஙனம் பரிசிலையும் பல எடுத்துக்காட்டும் பொருந்தச் செய்தார் யாரெனில்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" என்ற

தேவர் திருவாக்கின் நிதர்சனப்பொருளைத் துலங்கக்காட்டும் சைவாசாரசம்பந்நரும், சித்தாந்த சாஸ்திர ஞானபூஷணரும், எனது அரிய அன்பாளரும், ஆகிய திருமந்திர நகர் ஸ்ரீமாந். பொ. முத்தைய பிள்ளையவர்களேயாம்.

இச்சிவஞானப் புத்தமர்தவிருந்து சிறக்க அளித்தற்கு உறுதுணையாய் வேண்டுந் திரவியோபகாரஞ்செய்தார், சிவபுண்ணியசீலராகிய தேவிகோட்டை, ஸ்ரீமாந். மெ. அரு. நா. இராமநாதச் செட்டியாரவர்களே. இச்சிவ புண்ணியகர்த்தர்கள் இந்நிலத்து எல்லாநலன்களும்பெற்று வாழ்வார்களாக. தமிழகத்தார் தங்கள் கடமைகளைச்செய்து இப்பதி புண்ணியத்தில் பாகம்பெற்று வாழ்வார்களாக. சுபமஸ்து.

இங்ஙனம்,

அ. மு. இரத்நேசுவரையன்.
தமிழ்ப்பண்டிதன்
விவேகானந்த சபை.

மாத்தளை;
பிங்கள ௵
பங்குனிமீ ௳

## சைவ சித்தாந்த வித்தியாசாலை.

தேவகோட்டையில் ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்கள், தமிழில் இலக்கிய விலக்கணம் பயின்றவராய், சிவதீக்ஷைபெற்றுச் சைவாசாரமுடையவராய் இருப்பவரிற் சிலரைத் தெரிந்தெடுத்துச், சைவ சித்தாந்த சாத்திரங்களை அவர்க்குப் போதித்து வரும்படி, ஒரு வித்தியாசாலை தொடங்கி நடத்தி வருகிறார்கள். கற்பவரில் பொருளில்லாதவர்க்கு அன்னவஸ்திர முதலியனவும் உதவுவார்கள். இது சைவசித்தாந்த சாத்திர உணர்ச்சி உலகிற் பரவுதற்கு ஏற்ற நல்லதொரு சிவதருமமாம்.

அவ்வித்தியாசாலையிற் சேர்ந்து கற்கவிரும்புவோர் மேற்படி செட்டியாரவர்களுக்கு எழுதிக்கொள்ளலாம்.

சி. தாமோதரம்பிள்ளை,
சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கவித்வான், தேவகோட்டை.

## விளம்பரம்.

இதனடியிற் குறித்த மிக்க உபயோகமுள்ள புத்தகங்கள் எம்மிடத்தில் கீழ்க்கண்ட குறைந்த விலைக்குக் கிடைக்கும்.

| | ரூ.அ.ப. |
|---|---|
| பாரதச்சுருக்கம் | 3-8-0 |
| கம்பராமாணம் | 2-0-0 |
| வில்லிபுத்தூராழ்வார் பாரதம் | 3-0-0 |
| திருவிளையாடற்புராண வசனம் 64 படங்களுடன் | 1-8-0 |
| ஷை கிளேசு கடிதம் | 2-4-0 |
| மனுதர்மசாஸ்திர வசனம் | 3-0-0 |
| பெரியபுராண வசனம் ரப்பு 72 படங்களுடன் | 1-8-0 |
| ஷை கிளேசு கடிதம் | 2-4-0 |
| ஸ்ரீ தாயுமானசுவாமிகள் பாடல் மூலம் | 1-0-0 |
| அடங்கன்முறை | 4-8-0 |
| விஷ்ணுபுராண வசனம் | 2-8-0 |
| கருடபுராண வசனம் | 0-4-0 |
| ஷை திக்கு பட்டத்துடன் | 0-8-0 |
| வள்ளலார் சாஸ்திரம் | 1-8-0 |
| திருக்குறள் உரை | 0-12-0 |
| திருவிளையாடற்புராணமூலம் | 2-0-0 |
| மகாராஜாதுறவு மூலம் | 0-10-0 |
| பிரமோத்திரகாண்டம் | 1-8-0 |
| உபதேசகாண்டம் விருத்தியுரை | 5-0-0 |
| திருமூலர் திருமந்திரம் | 1-8-0 |
| மார்க்கண்டேய புராணம் | 1-8-0 |
| அறப்பளீசுரசதகம் மூலமும் உரையும் | 0-12-0 |

| | ரூ.அ.ப. |
|---|---|
| ஸ்ரீ தாயுமானசுவாமிகள்பாடல் மெய்கண்ட விருத்தியுரை. பலநூல்களைப்படித்து அரிதில் அறியும் வேதசிவாகமங்களின் ஞானபாதப் பொருள்களையெல்லாம் பலபிரபல பிரமாணங்களோடு இவ்வுரையில் இலேசாய் அறியக்கூடும் | 3-8-0 |
| நளவீமபாகசாஸ்திரம் | 1-4-0 |
| சப்தரிஷிவாக்கியம் சுத்தப் பதிப்பு | 4-0-0 |
| மூலிகை மர்மம் 4 பாகமுஞ் சேர்ந்தது | 2-0-0 |
| சீகாளத்திபுராணம் மூலமும் உரையும் | 2-8-0 |
| பட்டணத்தடிகள் புராணம் மூலமும் உரையும் | 1-8-0 |
| பட்டணத்தடிகள் பிரபந்த விருத்தியுரை | 2-8-0 |
| சிவரகசியம் (ஒருபாகம்மாத்திரம்வெளிவந்திருக்கிறது) | 3-8-0 |
| பழனித்தலபுராண வசனம் | 0-8-0 |
| தனிபாடல் உரை 1 பாகம் | 1-12-0 |
| ஷை 2-வது பாகம் | 1-12-0 |
| குமரேசர்சதகம் மூலமும் உரையும் | 0-12-0 |

இருக்கம் - கண்ணப்ப முதலியார்
43, பாளையப்பன்வீதி, எழுகிணறு, சென்னை.

**மஞ்சிகன் ஐந்திணைச் சிறுநிகண்டு.**

---

## பித்தவாயு லேக்கியம்.

இதை அவரவர்கள் வயது, சரீரம், நோய், அநுபவம், அநுகூலங்களுக்கு எற்றபடி, காலை, அல்லது மாலை, அல்லது காலையு மாலையும், அலலது போஜனத்திற்கு பிறகு, சிறு சிறு கெச்சைக்காயளவு சாப்பிட்டு வந்தால் பித்தவாயு பறந்தோடும். பசிதீபனமும் சரீரபுஷ்டியும் உண்டாம். இதுவே கைகண்ட தாதுபுஷ்டி மருந்துமாம். இதை அநுபவத்தாலறியலாம். இதற்குப் பத்தியமில்லை. 20 வேளை லேக்கியம் அடங்கிய டப்பியின் விலை ரூ. 1-0-0.

வி பி யில் அனுப்பினுல் ஒரு டப்பிமுதல் மூன்று டப்பிவரையில் 4 அணு அதிகமாகும்.

இ. கண்ணப்பமுதலியார்,
43, பாளையப்பன்வீதி, எழுகிணறு, சென்னை